முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1215

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

26.01.2023, வியாழக்கிழமை

1. மாதவராஜனே அரங்கா வாழ்க
   மக்களை காத்திடும் தேசிகா வாழ்க
   பூதலம் ஞானலோகமாக வேண்டி
   புண்ணியவழி காட்டும் அரங்கனே வாழ்கவாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
   வழங்குவேன் அரங்கன் உமக்கு ஞான அறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் தை மாதம் 12 ம் நாள் 26.01.2023, வியாழக்கிழமை)
   ஊழ்போக்கும் கலியின் சிறந்த ஞானி
   உலகோரை காக்கும் உயர்ந்த ஞானி
3. ஞானி உன் வழி உலகம் பின்தொடர
   ஞாலமதில் சடுதி இந்தலோகம் ஞானலோகமாகி
   ஆகியே கலியுகத்தின் இடர்களெல்லாம் அகன்றோடி சடுதி உலகம் பாதுகாப்புப்பெறும்
   வகைபட ஞானவான்கள் தலைமைகூடி வையகமே ஞான ஆட்சிதனை பெறும்
4. ஞான ஆட்சிதரும் மகா சக்தியாக
   ஞானிகளை உருவாக்கும் மாதவசியாக
   தானதர்ம பலம்கூட்டி ஞானபண்டிதன் என் தயவோடு
   தக்கபடி உலக க்ஷேமத்துக்காக சேவையாற்றுகின்ற
5. ஆற்றுகின்ற அரங்கனே உன் மார்க்கத்தை
   ஆறுமுகன் யான் வளர்த்து வருகின்றேன்
   மாற்றம் செய்து உன் அவதார நோக்கத்தின் பயனாக
   மண்ணுலகையே ஞான உலகமாக்குவேன்
6. ஆகவே உலக மக்கள் அரங்கன்
   அவதார நோக்கம் அறிந்து உணர்ந்து வந்து
   மிகைபட அரங்கன் தர்மத்தில் உதவி
   மேலான அரங்கமகான் சன்மார்க்கத்தை ஏற்று
7. ஏற்று காலமெல்லாம் அரங்கன் வழி
   இனிதே ஞானம் பயின்று வர
   ஆற்றல்பட அவரவர்க்கும் ஆறுமுகன் என்
   அருட்தயவு பெருகி உலகினில்
8. உலகினில் ஞானிகளெனும் சக்தி மிகுந்து
   உலகமே ஞானவான்கள் தலைமை கொண்ட
   கோலமதாய் ஞானிகள் ஆட்சியாக
   குறையில்லாத ஞான ஆட்சியுமாக இந்த பேருலகம் மாற்றங்காணும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–